# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2004 - 2017 ජනවාරි මස 27 වැනි සිකුරාදා - 2017.01.27

*2004 ஆம் இலக்கம் – 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 134 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 136 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 140 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


*__கவனிக்க__.– கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டமூலம் 2017, சனவரி மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக்கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் – 2017*

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2017.02.17ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனு கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | காலி | பத்தேகம | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், காலி. | பத்தேகம நகருக்கு அண்மையில் | 2017.03.01 |

***பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :***

*அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மாணி மற்றும் மின்மாணி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுகோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2017.02.17 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 05,*
*2017, சனவரி 11.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் – 2017**
**விலைமனுக்கோரல்– 2017**

*கட்டிட உரிமையாளர் விபரம் –*

1. *முழுப்பெயர் :----.*
2. *முகவரி :----.*

3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

கட்டிடம் தொடர்பாக-

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம் :----.
6. கட்டிடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மாணி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.
10. நிறுத்திவைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

1- 876

---

## பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் - 2017

வாழைச்சேனை மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான பகிரங்க மூடிய விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2017, மாசி மாதம் 21ஆந் திகதி பி.ப.3.00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை "மேல்நீதிமன்ற நீதிபதி , மேல் நீதிமன்றம் , மட்டக்களப்பு" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது மேல் நீதிமன்றத்தின் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாழைச்சேனை மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு" எனக் குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல்நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனுக்கோரல் இறுதித் திகதியன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமைக் கோரிக்கையினை முன் வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றோம்.

இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் 100 ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2017, மாசி மாதம் 20 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இல. | வாகன விபரம் | வகை | வழக்கு இல. | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்புக் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| 1. | மோட்டார் சைக்கிள் -01 | BAJAH PULZER BAR - 4407 | 30566/F | MC/VCH/ 01/2017 | 1,000.00 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்படட கேள்விப்பத்திரங்கள் 2017, மாசி மாதம் 21 ஆந் திகதி பி.ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற சம்பாத்திய குழுவினால் திறக்கப்படும்.

விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அவ் வாகனத்தை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற சம்பாத்திய குழு பிறப்பிக்கும். இதனடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனுக்கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் சைக்கிளை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 2.30 மணி வரைக்கும் வாழைச்சேனை மாவட்ட/நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் சைக்கிள் மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்தி வைப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாக செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்படி முடிய விலைமனு ஊடாக விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற பெறுகைக் குழுவிற்கே உரித்தானதாகும்.

எம்.வை.எம். இர்ஸதீன்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

1- 960

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : சீ எப் சீ பவுண்டிங் (கொரண்டி) லிமிட்டட்
பதிவிலக்கம் : ஜீஎல் 2414
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.12.28
பதிவு முகவரி : எல்12/ஈடி/02, 12 ஆம் மாடி, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், கொழும்பு 01

சபையின் கட்டளைப் பிரகாரம்,

எப்ஜே எண்ட் ஜீடி சேரம்,
சட்டத்தரணி.

1- 782

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், கீழ் வரும் கம்பனி 2016, மார்கழி மாதம் 16 ஆம் திகதி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : எட்பினிடி எடியுகேஸன் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 118220
பதிவு முகவரி : இல.510/ஈ, கதுறுகெடிய தெரு, களனிய

சபையின் கட்டளைப் பிரகாரம்,

இயக்குநர்,
சீஎல்சீ செகரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

1- 817

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் முன்னைய பெயர் : ஜன்கல் கிரீபர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவுவிலக்கம் : பீவீ 118542
பதிவு முகவரி : இல.38/7, 5 ஆம் ஒழுங்கை, விக்ரமசிங்கபுர, பத்தரமுல்லை

1- 826

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், கீழ்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : குளோபல் இன்டர்ட் ரேடிங் பார்ட்னர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 108297
கூட்டிணைப்புத் திகதி : 2015.09.10
கம்பனி பதிவு முகவரி : இல. 158, மெலிபன் வீதி, கொழும்பு11

1- 832

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர் : ரைனா டெக்னிகல் சேர்விஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 117284
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 505, மசூர் மௌலானா வீதி, மருதமுனை

கம்பனியின் பெயர் : கெயா லங்கா என்டபிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 96837
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 546/5, காலி வீதி, கொழும்பு 3

கம்பனியின் பெயர் : பெயினர் மெரின் ட்ரடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 115160
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 1/A/17, சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி , சென்.செபஸ்தியன் மேடு, கொழும்பு 12.

கம்பனியின் பெயர் : வின்டெக் இன்டநெஷனல் குரூப் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 110254
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 21/1, லியனக்கா வீதி, தெஹிவளை

எம்.சீ.எம்.நவாஸ்,
கம்பனிச் செயலாளர்.

1- 840

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் "OASIS CARDIAC CENTRE ( PRIVATE) LIMITED" எனும் நாமம் "FORTIS OASIS CARDIAC CENTRE (PRIVATE) LIMITED" என்று பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட திகதி 2011, பங்குனி மாதம் 11 ஆம் திகதி என அறியத்தருகின்றோம்.

கம்பனியின் முந்திய பெயர் : OASIS CARDIAC CENTRE (PRIVATE) LIMITED
கம்பனியின் இலக்கம்: பீவீ 4170
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 18/A, முகாந்திரம் ஈ. டி. டாபரே மாவத்தை, கொழும்பு 05.
கம்பனியின் தற்போதைய பெயர் : FORTIS OASIS CARDIAC CENTRE (PRIVATE) LIMITED

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சித்ரால் அமரதுங்க,
செயலாளர்.

1- 870

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2016, மார்கழி மாதம் 14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : J LINES ( (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 118668

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* "சித்தாரா", தலங்கம தெற்கு, கோணபல சந்தி.

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ- சேர்வ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

1-871

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் அடிப்படையின் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2016, மார்கழி மாதம் 07 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர் :* FUSION STREET (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 118543
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 397, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.

நிறுவனத்தின் முகாமையாளர்,
கோ- சேர்வ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

1-872

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இற்கமைய, பின்வரும் கம்பனிகள் பின்வரும் பெயர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களுடன் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*கம்பனியின் பெயர் :* இசுறு தெஹிகொல்ல பவர் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 118093
*கம்பனி பதிவலுவலகம் :* இல. 654/A, யாதிஹென, மல்வானை

*கம்பனியின் பெயர் :* இசுறு தெஹிகொல்ல சோலர் சிஸ்டம் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 118114
*கம்பனி பதிவலுவலகம் :* இல. 654/A, யாதிஹென, மல்வானை

*கம்பனியின் பெயர் :* இசுறு தெஹிகொல்ல சோலர் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 118236
*கம்பனி பதிவலுவலகம் :* இல. 654/A, யாதிஹென, மல்வானை

*கம்பனியின் பெயர் :* இசுறு தெஹிகொல்ல மல்டி விஷன் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 118094
*கம்பனி பதிவலுவலகம் :* இல. 654/A, யாதிஹென, மல்வானை

*கம்பனியின் பெயர் :* பெயார்பீல்ட் ப்ரிக் கம்பனி (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 117913
*கம்பனி பதிவலுவலகம் :* ஓர்கார்ட்ஸ் எஸ்டேட், புஸ்செல்லியாய, கெம்புறுஓயா, ஹந்துன்கமுவ

*கம்பனியின் பெயர் :* ட்ரெவ்கெல் குளோபல் (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 116735
*கம்பனி பதிவலுவலகம் :* இல. 75/1, டெம்லர்ஸ் வீதி, கல்கிஸ்ஸை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் "டி" சொளுடியோ
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

1-873

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

*கம்பனியின் பெயர் :* கிப்டபே (பிறைவெட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீவீ 119187
*பதிவுத் திகதி :* 2017, சனவரி 06
*பதிவு செய்யப்பட்ட முகவரி:* இல. 12, ரிட்ஜ்வே பிளேஸ், கொழும்பு 4.

(திருமதி) எஸ். இராஜகுலேந்திரா,
சட்டத்தரணி.

இல.34/1,
நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு -06.

1-881

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்:-

*கம்பனியின் பெயர் :* விஸ்டம் கிராமீன் லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பீபி 5372

*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2017.01.04*
*பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 7/1, கேம்பிரிஜ் பிளேஸ், கொழும்பு 7*

டபிள்யூ.எஸ். வீரமன்,
செயலாளர்.

இல. 27/1,
பெப்பிலியான வீதி,
நெதிமாலை,
தெஹிவளை.

*1- 916*

---

**பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : பியோனியர் மெரின் ட்ரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 115160*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.07.21*
*பதிவு முகவரி :137/1A, கொறட்டுவ வீதி, கொட்டிகாவத்தை, அங்கொடை*

*1-945*

---

**பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல் .-*

*கம்பனியின் பெயர் : மிஸ்ட்ஹில் ரெஸ்ட் அன்ட் டூவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் இலக்கம் : பீவீ 118815*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.12.23*
*பதிவு முகவரி : 43, /1A, தம்மாலங்கார மாவத்தை, தெஹிவளை*

*1-954*

---

**பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பெயர் : ஜே. எப். அன்ட் ஐ கன்வேட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இல : பீவி 117590*
*பதிவு முகவரி : இல.321, கடுவெல வீதி, கொஸ்வத்த, தலங்கம*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2016.11.01*

கம்பனிச் செயலாளர்கள்.

*1- 958*

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு மஹிந்த அபய எல்லேபொல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999, ஏப்பிறல் 20 ஆந் திகதியுடையதும் 4023 ஆம் இலக்கம் கொண்டதுமான அற்றோணித் தத்துவத்தின் வழங்குனரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுச் சட்டங்களின் கீழ் கூட்டிணைப்புச் செய்யப்பட்டு பதிவிலக்கம் 27 ஐக் கொண்டு, இலக்கம் 117, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்ட ரஜவெல்ல ஹோல்டிங்ஸ் லிமிட்டட் நிறுவனத்தால் அற்றோணித் தத்துவக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 122) பிரிவு 4 இன் ஏற்பாடுகளின் கீழ், சொல்லப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இத்தால் உடனடியாக இரத்துச் செய்து மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றது என அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

*1-809*

---

**அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்தல்**

வடமேல் மாகாணம், பொலன்நறுவை மாவட்டம், மெதிரிகிரிய, இல. 47, டெக்னிக்கல் பிளேஸ், ஹங்கிலிகெதர, சந்திராவதி இலக்கம் (685812959V கொண்ட தேசிய அடையாள அட்டை உரிமையாளர்) ஆகிய என்னால் வடமேல் மாகாணம், பொலநறுவை மாவட்டம், மெதிரிகிரிய, இல. 47, டெக்னிக்கல் பிளேஸ் களஞ்சி பெஜ்ஜாலகே சிசிர குமாரதுங்க ( இலக்கம் 732974326V கொண்ட தே அ.அ.உரிமையாளர்) என்பவருக்கு வழங்கப்பட்ட ஏ.ஏ. அபேரத்ன பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் 2013, சனவரி 13 ஆம் திகதிஅத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 11808 கொண்ட வெளிநாட்டு அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்பட்டுள்ளதெனவும், கூறப்பட்ட அற்றோணித் தத்துவம் மூலம் களஞ்சி பெஜ்ஜலாகே சிசிர குமாரதுங்க என்பவரினால் கூறப்பட்ட அற்றோணித்தத்துவத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹங்கிலிகெதர சந்திராவதி.

*1-823*

### அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்தல்

C/O DTOS Ltd. 10 th floor, Raffles Tower, 19 cybercity, Ebene, Republic of Mauritius என்ற முகவரியில் பதிவு செய்த அலுவலகத்தைக் கொண்ட MGF Sourcing Mauritius நிறுவனத்தின் நிர்வாகஸ்தரரான Jimmy Wong ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் இல. 41/28 நாககஹமுல்ல ரோட், பத்தரமுல்லை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கிஷாந்த விஜய ரத்னாயக்க என்பவருக்கு வழங்கியிருந்த Republic of Mauritius இல் உள்ள நொத்தாரிசு Darmaraj Pentiah என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, நவெம்பர் 22 ஆந் திகதியுடையதும் சொல்லப்பட்ட இலங்கைக் குடியரசில் பதிவாளர் தலைமை அதிபதி அலுவலகத்தில் 2011, திசெம்பர் 20 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை அவரது பதவி விலகலைத் தொடர்ந்து மீளப்பெற்று ரத்துச் செய்கின்றேன் என்பதோடு இதன் பின்னர் சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவிதக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்புள்ளவர்களல்ல என்பதை பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குயரசுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

Jimmy Wong,
MGF Sourcing Mauritius Ltd.
நிர்வாகஸ்தர்.

1-874

---

## ஏல விற்பனைகள்

### டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ

(முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**8134 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்**

**வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தெற்கு J/197 ஆம் இலக்க கிராம அலுவலர் அதிகாரி பிரிவு, உடுவில் கோரளே சுன்னாகத்தில் அமைந்துள்ள 'அக்கலாக்கல்லடி' என அழைக்கப்படும் V.C மூன்று லாச்சம் (3Lms V.C) மற்றும் வடக்கே V.C. 6 1/2 லாச்சம் 3Kls ஆகிய எனினும் அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எம். சித்தம்பலம் அவர்களால் வரையப்பட்ட , 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதியிடப்பட்ட 2731 ஆம் இலக்க வரைபடத்தின், துண்டு 01 க்கு அமைய V.C. மூன்று லாச்சம் எட்டு தசம் இரண்டு மூன்று குழி ( 3Lms V.C மற்றும் 8.23 Kls) ஆகிய காணித்துண்டும் அதிலுள்ள கிணற்றின் பகுதி உட்பட்ட அனைத்தும் அடங்கலாக**

யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு எஸ்.இளங்கோவன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந்திகதியிடப்பட்ட 8134 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் என்ற முகவரியில் வசிக்கும் வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராஜா மற்றும் சிறீஸ்கந்தராஜா ராஜகலா ஆகியோரால் டிஎப்சிசி வங்கி பீஎல்சி இற்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து

டிஎப்சீசீ வங்கி பீஎல்சி யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனை விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 147,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கி பீஎல்சியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
125 வருடகால மகோன்னத சேவை.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

1-815

---

**நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ**

கம்பளை கிளையின் பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் விற்பனை*

**ஆதனத்தின் விபரம்.-** கம்பளை, அம்பகமுவ பாதையில் இல. 230 மற்றும் கம்பளை புகையிரத நிலைய வீதியில் இல. 47எனும் இடத்தில் அமைந்துள்ள ஸ்டோர்ஸ் இனுள் வைக்கப்பட்டிருக்கும் அல்லது களஞ்சியப்படுத்தியிருக்கும் பிரீமா கோதுமை மா மற்றும் மற்றைய உலர் பண்டங்கள் குரோசரி மற்றும் சில்லறை பொருட்களும் சகல மொத்த வியாபார தொகைகளும், வியாபார பொருட்கள், உற்பத்தி முடிவடைந்த பொருட்கள் மற்றும் அசையும் சொத்துக்கள், கடன் பெறுபவர்களினால் காலத்திற்குக் காலம் கொண்டு வரப்படும் அல்லது மேற்கூறிய சூழலுக்குள் களஞ்சியப்படுத்தி வைத்துள்ள அல்லது வைத்துள்ள சகல வியாபார தொகை மற்றும் கடன் பெறுபவர்களினால் வியாபார தேவைகளுக்காக நடாத்திச் செல்லப்படும் வேறொரு இடத்தில் பொருத்தப்பட்டிருக்கும், வைக்கப்பட்டிருக்கும் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் தொகை பொருட்கள் உட்பட மற்றும் சகலதுமாகும்.

இவ்வாதனம் கம்பளையில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள ''அரவிந்த வெலந்த சமாகம'' எனும் பெயர் மகுடத்தின் கீழ் பங்கு வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் முதுன்கொட்டுவேகெதர டிஷான் எரங்க குணதிலக்க, முதுன்கொட்டுவேகெதர சுசில் பிரேமபுஷ்ப குணதிலக்க மற்றும் ரத்நாயக்க முதியன்சேலாகே நந்தா குணதிலக்க ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக நெஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

1 ஆம் விற்பனை : 2017, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு, இல. 47, புகையிரத நிலைய வீதி, கம்பளை எனும் இடத்திலும்

2 ஆம் விற்பனை : 2017, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு, இல. 230, அம்பகமுவ வீதி, கம்பளை எனும் சூழலிலும் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு .-** 2016.12.16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2016.12.02 ஆந் திகதிய ''திவயின'' ''த ஐலன்ட் '' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2017.01.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** :-விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேசசபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா;

கொள்முதல் மிகுதி 90% மும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனைநாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** ''முகாமையாளர் ,சட்ட அலுவலர் கடன் அறவிடுதல், நஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2448448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2210595, 071-4755974/
071-8446374/ 077-7761706

1- 937

**நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ**

*கம்பளை கிளையின் பகிரங்க ஏல விற்பனை*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

கம்பளை நகர சபைக்குட்பட்ட வர்த்தக வலயத்தினுள் கம்பளை புகையிரத நிலைய பாதையில் அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் P.R.N. சியாமலி ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.06.08 ஆந் திகதிய 1112 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் ஏழு மாடி வியாபாரக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது 1.85 பேர்ச் பரப்பளவானது. (மேற்கூறிய ஆதனம் வங்கிக்காக சகல வரி உரிமைகள், உரித்துக்கள் மற்றும் அதிகாரங்களின் கீழ் விற்பனை செய்யப்படும்)

இவ்வாதனம் கம்பளையில் தனது பதிவுக் அலுவலகத்தைக் கொண்டுள்ள ''அரவிந்த வெலந்த சமாகம'' எனும் பெயர் மகுடத்தின் கீழ் பங்கு வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் முதுன்கொட்டுவேகெதர டிஷான் எரங்க குணதிலக்க, முதுன்கொட்டுவேகெதர சுசில் பிரேமபுஷ்ப குணதிலக்க மற்றும் ரத்நாயக்க முதியன்சேலாகே நந்தா குணதிலக்க ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக நெஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கம்பளை நகர மத்தியிலிருந்து புகையிரத நிலைய பாதையில் ( நாவலப்பிட்டி பாதை) சுமார் 500 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் இடது பக்கத்தின் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது. (கம்பளை புகையிரத நிலையத்திற்கு முன்னால்)

2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு.ப.10.45 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** .- 2016.12.16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2016.12.02 ஆந் திகதிய ''திவயின'' ''த ஐலன்ட் '' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2017.01.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- :-விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேசசபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா;

கொள்முதல் மிகுதி 90% மும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனைநாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- ''முகாமையாளர், ஒருமுகப்படுத்தல், கடன் அறவிடுதல், நஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2448448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2310595/071-4755974/071-8446374/
077-7761706

1- 938

---

**நெஷனல் டிவலப்மன்ட் பேங்க் பீஎல்சீ**

*கம்பளை கிளையின் பகிரங்க ஏல விற்பனை -வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

கம்பளை - நாவலப்பிட்டி பாதைக்கு மிகவும் அண்மித்த சிங்ஹபுர எத்கால கிராமத்தில் அமைந்துள்ள மரியாவத்த எஸ்டேட் எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் D.M.P.B. ரம்புக்வெல்ல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2013.09.28 ஆந் திகதிய 4218 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் A எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மரங்கள் , பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 27.17பேர்ச் பரப்பளவானது.

இவ்வாதனம் கம்பளையில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள ''அரவிந்த வெலந்த சமாகம'' எனும் பெயர் மகுடத்தின் கீழ் பங்கு வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் முதுன்கொட்டுவேகெதர டிஷான் எரங்க குணதிலக்க, முதுன்கொட்டுவேகெதர சுசில் பிரேமபுஷ்ப குணதிலக்க மற்றும் ரத்நாயக்க முதியன்சேலாகே நந்தா குணதிலக்க ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக நெஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கம்பளை நகரத்திலிருந்து நாவலப்பிட்டி பாதையில் சுமார் 4.8 கிலோமீற்றர் தூரம் எத்கால சந்தி வரை வந்து இடது பக்கமாக திரும்பி ( உப தபால் காரியாலயத்திற்கு அருகில் ) பங்கலா பாதைக்கு பிரவேசித்து சுமார் 15 மீற்றர் தூரம் சென்று மீண்டும் இடது பக்கமாக திரும்பி துன்ஹிந்த பாதைக்கு பிரவேசித்து சுமார் 800 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையில் வலது பக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு** .- 2016.12.16 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2016.12.02 ஆந் திகதிய "திவயின" "த ஐலன்ட் " மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2017.01.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- :-விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேசசபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 500 ரூபா ;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2000 ரூபா;

கொள்முதல் மிகுதி 90% மும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனைநாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "முகாமையாளர், ஒருமுகப்படுத்தல், கடன் அறவிடுதல், நஷனல் டிவலப்மன்ட் வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2448448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவேல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2310595/071-4755974/071-8446374/ 077-7761706

1-939

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் மற்றும் மேலதிக பற்று தொடர்பு இல. 76510643/838798

போயகன, மல்பிட்டிய, கொழும்பு வீதி, இல. 37 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹிட்டிபண்டார அத்தபத்து முதியன்சேலாகே ஆனந்த பராக்கிரம குமார அல்கம ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.12.16 ஆம் திகதி 1998 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2016.12.08ஆந் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல33, தல்கொடபிட்டிய மாவத்தை, மல்கடுவாவ, குருநாகல் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.H.W. அசோக ஜயலால் 1 ஆம் ஆதனத்தை அவர்கள் 2017.02.23ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கும், 2 ஆம் ஆதனத்தை பி.ப.1.00 மணிக்கும் 3 ஆம் ஆதனத்தை பி.ப.3.00 மணிக்கும் அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் திரகந்தாஹ கோரளை வேஉடவில்லி ஹத்பத்துவில் குருநாகல் பிரதேச சபை எல்லைகளுள் குருநாகல் பிரதேச செயலகப் பிரிவில் மதிதியவல கிராம அலுவலர் பிரிவில் ஒலுபெலியாவயில் அமைந்த "ஹிட்டினவத்த அல்லது ஹெவனவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். கலகெதர தயாரித்த 2007.08.26 ஆந் திகதியிட்ட வரைபட இல. 8428 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : எம். ரணசிங்க மற்றும் ஏனையோர்களின தும் நெல்வயலும் ; கிழக்கு : வரைபட இல. 5846 இல் துண்டு 6 உம்; தெற்கு : வரைபட இல. 5846 இல் துண்டு 5, 20 அடி அகலமுள்ள பாதையும் (கொழும்பு குருநாகல் பிரதான வீதி); மேற்கு: வரைபட இல. 5846 இல் துண்டு 1 மற்றும் 2 உம் ; வடமேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபட இல. 8428 இல் துண்டு 1 உம் எல்லைகளாகக் கொண்ட

வரைபடம் இல. 5846 இன்படி துண்டு 5 என அடையாளமிட்ட வழிப்பாதையை பராமரிப்பதற்கும் உபயோகிப்பதற்குமான உரிமையும் இருபத்தெட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 28பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் A1681/164 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி கீழே (அ), (ஆ) மற்றும் (இ) இல் விபரித்த காணிகளின் மீளளவை செய்து ஒன்றிணைத்த காணி ஆகும்.

(அ) மேற்குறிப்பிட்ட ஒலுபெலியாவயில் அமைந்த "ஹிட்டினவத்த அல்லது ஹெவனவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ரீ. குணசேகர தயாரித்த 1997.07.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5846 இல் விபரித்த துண்டு 03 என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : எம். ரணசிங்கவின் காணியும் நெல் வயலும்; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 4A உம் ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 5 (20 அடி அகலப் பாதையும்) ; மேற்கு : துண்டுகள் 1 உம் 2 உம் ; வடமேற்கு : எம். ரணசிங்கவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 5846 இன் படிதுண்டுகள் 5 என அடையாளமிட்ட வழிப்பாதையை பராமரிப்பதற்கும் உபயோகிப்பதற்குமான உரிமையும் பதின்நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 14பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் A1297/244 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்குறிப்பிட்ட ஒலுபெலியாவயில் அமைந்த "ஹிட்டினவத்த அல்லது ஹெவனவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ரீ. குணசேகர தயாரித்த 1997.07.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5846 இல் விபரித்த துண்டு 4ஏ என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : எம். ரணசிங்கவினதும் ஏனையோரினதும் நெல்வயலும் ; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 4B உம் ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 5 (20 அடி அகலப் பாதையும்) ; மேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 3 உம் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 5846 இல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட வழிப்பாதையை பராமரிப்பதற்கும் உபயோகிப்பதற்கும் உரிமையுடன் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் A1528/163 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) மேற்குறிப்பிட்ட ஒலுபெலியாவயில் அமைந்த "ஹிட்டினவத்த அல்லது ஹெவனவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ரீ. குணசேகர தயாரித்த 1997.07.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5846 இல் விபரித்த துண்டு 4B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : எம். ரணசிங்க மற்றும் ஏனையோரின் நெல்வயலும் ; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 6 உம் ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 5 (20 அடி அகலப் பாதையும்) ; மேற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 4A உம் எல்லைகளாகக் கொண்டு வரைபடம் இல. 5846 இல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட வழிப்பாதையை பராமரிப்பதற்கும் உபயோகிப்பதற்கும் உரிமையுடன் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் A1559/131 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் திரகந்தஹய கோரளை வேஉடவில்லி ஹத்பத்துவில் குருநாகல் பிரதேச சபை எல்லைகளுள் குருநாகல் பிரதேச செயலகப் பிரிவில் மதிதியாவல கிராம அலுவலர் பிரிவில் போயகனயில் அமைந்த "மெதஅமுன" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. பி. எம். வெபர் தயாரித்த 1985.10.27 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1018 இல் விபரித்த துண்டு 2 என பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1 மற்றும் எலயும் ; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1 உம் ; தெற்கு : திலகரத்ன உரிமை கோரும் காணியும் ; மேற்கு : கொழும்பு- குருநாகல் பிரதான வீதியும் எல்லைகளாகக் கொண்டு இருபத்துமூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் A1681/165 வரை கொண்டு வரப்பட்டு A 1091/196 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட போயகனயில் அமைந்த "மெதஅமுன" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. டபிள்யூ. டி. எஸ். குணரத்ன தயாரித்த 1998.07.11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 78/98 இல் விபரித்துள்ள துண்டு 1 என தற்சமயம் மீளளவையின்படி மேற்குறிப்பிட்ட காணி - வடக்கு: மகேந்திர ரணசிங்ஹ உரிமை கோரும் நெல்வயலும் ; கிழக்கு : மகேந்திர ரணசிங்ஹ உரிமை கோரும் நெல்வயல் தற்சமயம் விற்கப்பட்டுள்ளதும் திலகரத்ன உரிமை கோரும் காணியும் ; தெற்கு: தற்சமயம் விற்கப்பட்டுள்ளதும் திலகரத்ன உரிமை கோரும் காணியும் ; மேற்கு : கொழும்பு - குருநாகல் வீதியும் எல்லைகளாகக் கொண்டு இருபத்து மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட ஒலுபெலியவயில் அமைந்த உத்தரபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். கலகெதர தயாரித்த 2007.08.26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 8428 இல் காணித்துண்டு 01 இல் காட்டப்பட்ட மேற்குறிப்பிட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : மகேந்திர ரணசிங்ஹ உரிமை கோரும் நெல்வயலும் ; கிழக்கு : மகேந்திர ரணசிங்ஹவும் ஏனையோரும் உரிமை கோரும் நெல்வயலும் ; தெற்கு : வரைபடம் இல. 5846 இல் துண்டு 1 உம் ; மேற்கு : கொழும்பு - குருநாகல் பிரதான வீதியும் ; வடகிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 8428 இல் துண்டு 2 உம் எல்லைகளாகக் கொண்டு இருபத்து மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 23பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் திரகந்தஹய கோரளை வேஉடவில்லி ஹத்பத்துவில் குருநாகல் பிரதேச சபை எல்லைகளுள் குருநாகல் பிரதேச செயலகப் பிரிவில் மடிதியவல கிராம அலுவலர் பிரிவில் ஒலுபெலியவ கிராமத்தில் அமைந்த "கணுகெட்டியகும்புர தற்போது வத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பி. திஸாநாயக்க தயாரித்த 1993.06.26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1013A இல்

விபரித்த துண்டு 8 என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : அதே வரைபடத்தில் துண்டு 2 உம் ; கிழக்கு : அதே வரைபடத்தில் துண்டு 3 (பிரவேசப் பாதை) மற்றும் துண்டு 7 உம் ; தெற்கு மற்றும் கிழக்கு : டி. ஆர். எல். திலகரத்னவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் 1013A இல் (3 அடி அகல ஓடை) துண்டு 4 உம், துண்டு 3 மீதான வழி (பாதை ஒதுக்கப்பட்டது) உரிமையும் இருபத்தொன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 29பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், மண் மற்றும் சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் A1681/166 வரை கொண்டு செல்லப்பட்டு A 1303/134 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

எச். ஏ. கே. சம்பத்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி.
2 ஆம் நகர மேற்தரக் கிளை,
குருநாகல்.

1- 877

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

மேலதிக பற்று தொடர்பு இல. 73195558

அம்பன்பொல, கிருலெகம, அநுராதபுர வீதி, இல. 280/1 என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி திஷாநாயக்க முதியன்சேலாகே பிரீதிகா லக்மினி திஸாநாயக்க ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.04.22 ஆம் திகதிய 1964 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2016.04.19ஆந் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகை களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.33, தல்கொடபிட்டிய மாவத்தை, மல்கடுவாவ, குருநாகல் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு.H.W. அசோக ஜயலால் அவர்கள் 2017.02.22ஆம் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், வன்னி ஹத்பத்து கந்திஹ கோரளையில் மாஹோ பிரதேச சபை எல்லைகளுள் அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவில் உடன்கவ 191 கிராம அலுவலர் பிரிவில் கிவுலேகம கிராமத்தில் அமைந்த ''சியம்பலாகஹ வத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் தயாரித்த 2006, ஒற்றோபர் 28 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 371/06 இல் விபரித்த துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : குகுலேவயிலிருந்து பிரதான வீதி வரை செல்லும் பிரதேச சபை வீதியும்; கிழக்கு : அனுராதபுரத்திலிருந்து குருநாகல் வரை செல்லும் பிரதான வீதியும் ; தெற்கு : டி. எம். குணபாலவின் காணியும் ; மேற்கு : நந்தவதியின் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் முப்பத்தெட்டு தசம் ஆறு சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 38.60பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணியின் துண்டு 1 கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பிட்டவாறு கிவுலேகமயில் அமைந்த F. V. P. வரைபடம் இல. 3178 இல் விபரித்த அரச காணியின் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : கிவுலேகம வீதியும் ; கிழக்கு : அனுராதபுரத்திற்கு செல்லும் வீதியும் ; தெற்கு : சுனீதா லக்மாலியின் காணி தற்போது பிரீதிகா லக்மினியின் காணியும் ; மேற்கு : நந்தவதியின் காணியும் எல்லைகளாகக் கொண்டு சைபர் தசம் மூன்று சைவர் சைவர் ஹெக்டயார் (0.300 ஹெக்டயார்) விஸ்தீரணமுடைய காணியும் அதில் அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நிகவெரட்டிய காணிப் பதிவகத்தில் நிகா/மஹா/33/108 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. எம். ஆர். வீரசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கல்கமுவ.

1- 878

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இலக்கங்கள் : 71896755 மற்றும் 75927952

நிட்டம்புவ, நம்பதளுவ, இல. 570 C என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அத்தபத்து முதியன்சேலாகே மஹிந்த அதபத்துக்குரிய ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.10.21 ஆம் திகதிய 1990 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2016.10.13ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஒக்ஷன்ஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 2017.02.15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை உடுகஹ மற்றுவில் நம்பதலுவ கிழக்கு. 348/G கிராம அலுவலர் பிரிவில் நித்தம்புவ உப அலுவலகம் அத்தனகல்ல பிரதேச சபை எல்லைகளுள் நம்பதலுவ கிராமத்தில் அமைந்த “தெம்பிலிஹேன அல்லது தெம்பிலிகொட்டுவ” என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரீ. ஏ. ரணசிங்ஹ தயாரித்த 1989, ஒற்றோபர் 02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2075 இல் விபரித்த துண்டு B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு – வடகிழக்கு : துண்டு 15 உம் (15 அடி அகலமான பாதை) முன்னர் எஸ். டி. பண்டாரநாயக்கவுக்கும் தற்போது ஈ.எக்மன் மற்றும் ஏனையோரதும் காணியும்; தென் கிழக்கு: கந்தஹேனயும்; தென்மேற்கு: எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் வாரிசுகளின் ஹொரகொல்ல தோட்டமும்; வடமேற்கு : துண்டு A யும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2075 இன் படி இருபத்தேழு பேர்ச்சுகள் (ஏ0. றூ0. 27பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும் , இது கம்பஹா காணிப்பதிவகத்தில் F 377 /196 இல் பதிவு செய்யப் பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. என். ஜயசுந்தர தயாரித்த 2001, திசெம்பர் 01 ஆந் திகதியிட்ட மிகவும் அண்மைய அளவை வரைபடம் இல.1943 இன் படி துண்டு B என அடையாளமிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு பின்வருமாறு விபரிக்கப் பட்டுள்ளது.

நம்பதலுவ கிராமத்தில் அமைந்த “ தெம்பிலிகொட்டுவ” என அழைக்கப்படும் காணியின் மேற்குப்பிட்ட வரைபடம் இல.1943 ல் விபரித்த துண்டு B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடகிழக்கு : தற்போது ஈ. எக்மன் மற்றும் ஏனையோர்களினதும் முன்னர் சேர் எஸ். டி. பண்டாரநாயக்க வினதும் காணியும்; தென் கிழக்கு : கந்தஹேனயும் ; தென் மேற்கு : எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் வாரிசுகளின் ஹொரகொல்ல தோட்டமும் ; வடமேற்கு : துண்டு Aயும் பாதைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் எல்லைகளாகக் கொண்டு மேற் குறிப்பிட்ட வரைபடம் இல. 1943 இன் படி இருபத்தேழு பேர்ச்சுகள் (ஏ0. றூ0. பே27.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந் துள்ள கட்டிடங்கள், மரங்கள் , பயிர்கள் மற்றும் சகலதும் அங்கு வளர்பவையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

ஆர். பி. ஆர்.எம்.பிரியங்கர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
நித்தம்புவ கிளை.

1-966